NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 11 November 2020

# 2021 தொடக்கத்தில் தடுப்பூசி கிடைக்கலாம்

அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் சிங்கப்பூருக்கு கொவிட்-19 தடுப்பூசி கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

டியூக்-என்யுஎஸ் ஆய்வாளர்கள் உடன் இணைந்து தடுப்பூசி ஆய்வை மேற்கொண்டு வரும் ‘ஆர்க்டியூரஸ் தெரபியூட்டிக்ஸ்’ எனும் அமெரிக்க மருந்து தயாரிப்பு நிறுவனம் இதனைத் தெரிவித்து உள்ளது.

சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட மருத்துவப் பரிசோதனைகளில் சாதகமான முடிவுகள் கிடைத்திருப்பதாக ஆர்க்டியூரஸ் நிறுவனம் கூறியிருக்கிறது.

தடுப்பூசி தயாரிப்பிற்காக சிங்கப்பூரின் பொருளியல் வளர்ச்சிக் கழகம் 45 மில்லியன் அமெரிக்க டாலர் (S$60.5 மி.) பணத்தைச் செலவிட்டு வருவதாக அந்நிறுவனம் குறிப்பிட்டது. மேலும் $175 மில்லியன் வரையிலும் தடுப்பூசிகளைப் பெறுவதற்கான உரிமையைப் பொருளியல் வளர்ச்சிக் கழகம் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தங்களது கூட்டுமுயற்சிகளில் உருவான தடுப்பூசியை ஒருமுறை போட்டாலே செயல்திறன்மிக்கதாக இருப்பதை இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் காட்டுகின்றன என்று சொன்னார் டியூக்-என்யுஎஸ் மருத்துவக் கல்வி நிலையத்தின் பேராசிரியர் ஊய் எங் இயோங்.

முக்கிய பொதுச் சுகாதார நலன்களை வழங்கும் ஆற்றலைத் தங்களது தடுப்பூசி கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரின் நிதி தங்களது நிறுவனத்திற்குக் கூடுதல் வளங்களை வழங்கும் என்றார் ஆர்க்டியூரஸ் நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி ஆண்டி சஸீன். அதன் மூலம் இப்போதைய உடன்பாட்டின்படி இஸ்ரேல், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தேவைகளை நிறைவு செய்வதுடன் மற்ற நாடுகளுக்கும் அடுத்த ஆண்டில் தடுப்பூசியை ஏற்றுமதி செய்ய முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதையடுத்து, கொரோனா தடுப்பூசி உருவாக்கத்திற்கான போட்டி சூடுபிடித்துள்ளது.

அண்மையில், தங்களது தடுப்பூசி 90% செயல்திறன்மிக்கதாக உள்ளது என்று ‘ஃபைஸர்-பயோஎன்டெக் எஸ்இ’ நிறுவனங்கள் அறிவித்திருந்தன. பாதுகாப்பு தொடர்பான தரவுகளுக்காகக் காத்திருப்பதாகவும் இம்மாத இறுதிக்குள் கிடைத்துவிடும் என்றும் அவை தெரிவித்தன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.